**வணக்கம்!**

## எல்லோருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துகளை அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றோம்!

### கல்வி - கலைவகுப்புகள்

தைப்பொங்கல் விழா நடை பெறுவதால் பாடசாலை 18.01.2025 சனிக்கிழமை விடுமுறை.

### 18.01.2025 அன்னை தமிழர் திருநாள் (பொங்கல் விழா)

18.01.2025 அனைத்து வளாகங்களும் இணைந்து நடாத்தும் அன்னையின் தமிழர் திருநாள் விழா நடைபெறும். அனைத்து மாணவர்கள் ஆசிரியர்களும் இவ்விழாவிற்கு வருகை தரவேண்டும் என்பதற்காக அன்று வழமையான எமது பாடசாலை நடைபெறமாட்டாது. அனைவரையும் வருகை தருமாறு அன்போடு அழைக்கின்றோம்.

நேரம் - 11:30- 19:00, இடம் - Norges Idrettshøgskole, Sognsveien 220, 0863 Oslo.



பொங்கல் விழா நோக்கிய கலைப் பயிற்சிகள் அந்தந்த கலை ஆசிரியர்கள் மற்றும் இணைப்பாளர்கள் ஊடாக பயிற்சி நேரங்கள் பயிற்சி நடைபெறும் இடம் போன்ற தகவல்கள் பகிரப்பட்டு பயிற்சிகள் நடைபெறுகின்றன.

அன்பார்ந்த பெற்றோர்களே! மாணவர்களே!
தவறாது உங்கள் பயிற்சிகளில் கலந்து கொண்டு பொங்கல் விழாவை சிறப்பிக்கும் வண்ணம் அன்போடு வேண்டி நிற்கின்றோம்.

## நிதி 2024

Høst 2024 தவணை கட்டணங்கள் அனைவருக்கும் அனுப்பப்பட்டுவிட்டது. தயவுசெய்து குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் பணம் செலுத்துங்கள். ஏதேனும் கேள்விகள் இருந்தால், எங்களை தொடர்புகொள்ளுங்கள்: மின்னஞ்சல் faktura.lorenskog@annai.no  தொலைபேசி 908 89 393

செலுத்தியவர்கள் இத்தகவலை விலத்திச்செல்லவும்.

## ஆண்டுக்கூட்டம் 2025 - 15.02.2025 சனிக்கிழமை

இடம் : ஓசன் பாடசாலை மேல்க் கட்டிடம். நேரம்: 09:45-12:00 (இ.வே.10:45-11:15)

குறிப்பு:
ஆண்டுக்கூட்டத்திலே அனைவரும் பங்கேற்கலாம். ஆனால் கேள்வி கேட்கும் தகைமைக்கு உரித்தானவர்கள் முழுமை பெற்ற அங்கத்தவர்கள் மட்டுமே!

எனவே அன்பார்ந்த பெற்றோர்களே!
உங்கள் கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளதா? என்பதை சரிபார்த்து கொள்ளவும். இதில் ஏதும் ஐயப்பாடு இருப்பின் நிதிப் பொறுப்பாளருடன் தொடர்பு கொள்ளவும்.

2025 ஆண்டுக்கூட்டத்தில் இடம்பெறவிருக்கும் தெரிவுகள்.
-2025-2027 இற்கான நிர்வாகம்
-நிர்வாகத் தெரிவுக்குழு
-கணக்காய்வாளர்
-விளையாட்டுப் போட்டிக்கான குழு
-விளையாட்டுப் போட்டிக்கான இல்லப்பொறுப்பாளர்கள்

## எமது வளாக இக்கல்வியாண்டில் நடைபெறவுள்ள நிகழ்வுகள்

**18.01.2025 அன்னை தமிழர் திருநாள் (பொங்கல் விழா)**
**15.02.2025 வருடாந்தப்பொதுக்கூட்டம் லோறஸ்கூக் வளாகம்**

குறிப்பு: சூழ்நிலைக்கேற்ப வரும் மாற்றங்களுக்கு எம்மை புரிந்துணர் வோடு தயார்நிலைப்படுத்துவோம்.

## தமிழை வளர்க்கப் பணிபுரிவோம்!

நன்றி.

இவ்வண்ணம்
நிர்வாகம்
**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் லோறன்ஸ்கூக்**